முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1232

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.02.2023, ஞாயிற்றுக்கிழமை

1. பார்காக்க வந்த வள்ளலே
பாலதண்டாயுதன் என் சக்தியாக வாழும் அண்ணலே
பார்த்துரைப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் தை மாதம் 29 ம் நாள், 12.02.2023 ஞாயிற்றுக்கிழமை)
பாருலகம் உன்னால் நலம்பெற வேண்டி சுப்ரமணியப்பெருமான் யான்
2. யானுமே சுபகிருது கலைதிங்களில் உரைப்பேன்
உயர்வாக அரங்கனை நோக்கி வருகின்ற
ஞானவான்களைக் கொண்டே இனிதே
ஞான ஆட்சிஉலகில் நடத்துவேன்
3. நடத்திட ஞானபண்டிதன் என்வழி இனிதே
நல்லமாற்றம் உலகில் கண்டுதேற
ஞானதேசிகன் உன் வழி ஞானமும் தர்மமும்தவமுமாக இயக்கி
நம்பிக்கைஊட்டி மக்களிடையே வானவர்களேவியக்க வளர்க்கின்றேன் அற்புதமான மாற்றத்தை
4. மாற்றமதும் கலியினில் அரங்கன் உன்னால்தான் நடந்தேறும்
மக்களெல்லாம் இதை ஏற்று ஆற்றல்பெருக வேண்டி
முழுமதிதோறும் அந்தனன் வாரம்தோறும் ஐயமற
அரங்கனை நோக்கி தொடர்ந்து வந்துகொண்டிருந்தால்
5. இருக்கவே பிறவித்தொடர்புள்ள உலகமக்கள் அனைவரும்
என்னால் இனிதே அடையாளம் கொள்ளப்பட்டு
பட்டுமே சடுதி ஞானவான்கள் படை
பழுதின்றி பாருலகமெங்கும் பெருகி
6. பெருகி பேரற்புதம் அரங்கன் ஞானமாக
பிசகின்றி பிரணவக்குடிலின் சக்திவழி
தரணியே பெரும் மாற்றங்காணும்
தடையின்றி இந்த அற்புதம் நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–